# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:123 ★03.09.2026 ★தமிழ் நாளிதழ் ★வியாழக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:123 ★03.09.2026 ★TamilDaily ★Thursday ★Page-4 ★Price-₹5/- Chennai



**தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


## தமிழகத்தில் புதிதாக 7 செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்படும்: அமைச்சர் அருண்ராஜ்

தமிழகத்தில் புதிதாக 7 செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்படும். நெல்லை, திருச்சி, தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல்லில் தலா 100 இடங்களும், கோவையில் 60 இடங்கள் கொண்ட கல்லூரியும் அமைக்கப்படும் என சுகாதாரத் துறை அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இது குறித்து அவர் கூறுகையில், “தமிழகத்தில் திருநெல்வேலி, திருச்சி, தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல் ஆகிய ஆறு மாவட்டங்களில் தலா 100 பி.எஸ்.சி நர்சிங் இடங்களுடன் புதிய செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்படும். கோவை இஎஸ்ஐ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாநில அரசு நிதியில் 60 பிஎஸ்சி நர்சிங் இடங்களுடன் புதிய செவிலியர் கல்லூரி தொடங்கப்படும்.

அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் காலி பணியிடங்கள் இருக்கக்கூடாது என்பது தான் தவெக அரசின் நோக்கம்.

அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவ காலி பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். கட்டுமான பணிகள் நிறைவுற்ற மருத்துவமனைகள் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்,” என்றார்.



பின்னர், ரிஷிவந்தியத்தில் தாலுகா மருத்துவமனை அமைக்கப்படுமா? என்ற உறுப்பினர் கேள்விக்கு, “தேவை இருப்பின் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்” என அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்தார்.

மேலும், வள்ளியூர் மருத்துவமனையை தரம் உயர்த்த வேண்டும் என்ற மற்றொரு உறுப்பினரின் கேள்விக்கு, “தேவை இருப்பின் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்,” என்றார். பின்னர், பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு ஃப்ரீஸர் பாக்ஸ் மற்றும் சி.டி.ஸ்கேன் வசதி ஏற்படுத்த வேண்டும் என எம்எல்ஏ மோகன் கோரிக்கை விடுத்தார். இதற்கு பதிலளித்த அமைச்சர் அருண்ராஜ், பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு 2 ஃப்ரீஸர் பாக்ஸ்கள் வழங்கப்படும். மேலும், தேவையிருப்பின் சி.டி. ஸ்கேன் வசதியும் ஏற்படுத்தித் தரப்படும். பண்ருட்டி அரசு மருத்து வமனையை கடலூர் அரசு மருத்துவமனைக்கு நிகராக தரம் உயர்த்துவது தொடர்பாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

பின்னர், திமுக எம்எல்ஏ ஓபிஎஸ் பேசுகையில், “பாம்புக்கடி பிரச்சினைகள் பற்றி 29 நிமிடங்கள் அமைச்சர் அருண்ராஜ் பதில் சொன்னார்; பாம்புக்கடி பிரச்சினைகள் உள்ள பகுதிகளில் நாக தோஷம் இருப்பதாக புரிந்துகொள்கிறேன்.

நாக தோஷம் கழிப்பதற்கு பிரார்த்தனைகள் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்தார்.

பின்னர் பேசிய, அமைச்சர் அருண்ராஜ், “எங்கள் அரசு அறிவியல்ப்பூர்வமாக இயங்கக்கூடிய அரசு; தோஷம், பில்லி சூனியத்தில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை; ஜலதோஷம் தான் அதிகம் உள்ளது. பாம்புக்கடி தோஷம் இல்லை” என்று கூறினார்.

## திருவண்ணாமலையில் செப்.5, 7, 8ல் வீடு தேடி ரேஷன் பொருட்கள் விநியோகம்

### மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தகவல்

திருவண்ணாமலை, செப். 3

திருவண்ணாமலை மாவட்டத்தில் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களின் இல்லத்திற்கே நேரில் சென்று அத்தியாவசிய ரேஷன் பொருட்களை வழங்கும் ‘தாயுமானவர் திட்டத்தின்’ கீழ் செப்டம்பர் மாதத்திற்கான பொருட்கள் செப்டம்பர் 5, 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் விநியோகம் செய்யப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் மூலம் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் வீடுகளுக்கே சென்று அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு, பாமாயில் உள்ளிட்ட அத்தியாவசிய ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. அதன்படி, திருவண்ணாமலை மாவட்டத்தில் செப்டம்பர் 2026ஆம் மாதத்திற்கான அத்தியாவசியப் பொருட்கள் செப்டம்பர் 5, 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் தகுதியுடைய முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லங்களுக்கே நேரில் சென்று வழங்கப்பட உள்ளன.

எனவே, இத்திட்டத்தின் கீழ் தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்கள் உரிய நாட்களில் தங்களுக்கான அத்தியாவசிய ரேஷன் பொருட்களைப் பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.

# “மீஞ்சூரில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், ஆவடியில் அனைத்து வீடுகளுக்கும் 24 மணி நேரமும் குடிநீர்” முதல்வர் விஜய்

## நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறையின் 8 அறிவிப்புகள்

தமிழகத்தின் நகரங்களில் குடிநீர், பாதாளச்சாக்கடை, திடக்கழிவு மேலாண்மை, பசுமைப் பரப்பு மற்றும் சாலை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் பல்வேறு புதிய திட்டங்களை சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசுகையில், “தமிழகத்தின் நகரங்களில் குடிநீர், பாதாளச் சாக்கடை, திடக்கழிவு மேலா ண்மை, சாலைகள், பூங்காக்கள் மற்றும் பள்ளி வசதிகளை மேம்படுத்தும் வகையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. வேகமாக அதிகரித்துவரும் நகரமயமாக்கல் மற்றும் மக்கள் தொகைப் பெருக்கத்தால், நகரங்களில் குடிநீர், கழிவுநீர், திடக்கழிவு மேலாண்மை, போக்குவரத்து, பசுமை மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு தொடர்பான தேவைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

எதிர்காலத் தேவைகளைக் கருத்தில்கொண்டு, நகரங்களை சுகாதாரமான, பாதுகாப்பான, பசுமையான மற்றும் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற நகரங்களாக மாற்றுவது இன்றைய அவசியமாகும். இதனை முன்னிட்டு, பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்துவது அரசின் முக்கியக் கடமையாகும்.

1. பாதுகாப்பான மற்றும் தடையற்ற குடிநீர் விநியோகத் திட்டங்கள்: மக்களுக்குத் தேவையான குடிநீரைத் தடையின்றி வழங்கும் வகையில் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. வட சென்னை, ஆவடி, பொன்னேரி மற்றும் மீஞ்சூர் பகுதிகளின் குடிநீர்த் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில், மீஞ்சூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் (Desalination Plant) 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஆவடி மாநகராட்சியில் அனைத்து வீடுகளுக்கும் 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் வகையில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

மதுரை, கடலூர் மாநகராட்சிகள், 9 நகராட்சிகள் மற்றும் 20 பேரூராட்சிகளில் குடிநீர் வசதிகளை மேம்படுத்த ஆயிரம் கோடி ரூபாயும், பழமையான 33 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைச் சீரமைக்க முதற்கட்டமாக 300 கோடி ரூபாயும் ஒதுக்கப்படும்.

சென்னை கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறனை அதிகரிக்க 410 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.



2. நவீன பாதாளச் சாக்கடை மற்றும் கழிவுநீர் மேலாண்மை: மதுரை மாநகராட்சியில் 40 ஆண்டுகள் பழமையான பாதாளச் சாக்கடை அமைப்பைச் சீரமைக்க முதற்கட்டமாக 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நாகர்கோவில் மாநகராட்சியில் விடுபட்ட மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளிலும், குன்றத்தூர் மற்றும் நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிகளிலும் 960 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

மேலும், சென்னை பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் உள்ளிட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகளை மேம்படுத்த 236 கோடி ரூபாய் செலவிடப்படும். 3. அறிவியல் பூர்வமான திடக்கழிவு மேலாண்மை மற்றும் மின் உற்பத்தி:

திருநெல்வேலி மாநகராட்சியில் 256 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 மெகாவாட் திறன் உற்பத்தி செய்யும் வகையிலும், சேலம் மாநகராட்சியில் 291 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 மெகாவாட் திறன் உற்பத்தி செய்யும் வகையிலும் 'திடக்கழிவிலிருந்து எரிசக்தி உற்பத்தி செய்யும் திட்டங்கள்' (Waste to Energy Projects) செயல்படுத்தப்படும். இத்திட்டங்கள் மொத்தம் 547 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

4. மேம்படுத்தப்பட்ட நகர்ப்புர சாலைகள் மற்றும் போக்குவரத்துக் கட்டமைப்பு:

குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைப் பணிகளுக்காகத் தோண்டப்பட்டு சேதமடைந்த சாலைகளைச் சீரமைக்கவும், புதிய சாலைகள் அமைக்கவும் சென்னை உட்பட அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் 1,850 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

‘வெற்றித் தமிழகம்’ தொலைநோக்குத் திட்டத்தின்படி, சென்னை மாநகராட்சியில் 45 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 35 கிலோ மீட்டர் நீளத்திற்கு மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்ற நவீன சாலைகள் மற்றும் நடைபாதைகள் (People Friendly Modern Streets), பள்ளிகளைச்சுற்றி 15 கிலோ மீட்டர் நீளத்திற்குக் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் சாலை வசதிகள் (Safe Access to Schools) மற்றும் 105 சாலை சந்திப்புகளை மேம்படுத்தும் பணிகள் 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

பிற மாநகராட்சிகளிலும் இதேபோன்ற நவீன சாலைகள் மற்றும் நடைபாதைகள், பள்ளிகளைச் சுற்றியுள்ள பாதுகாப்பான சாலை வசதிகள் மற்றும் சாலை சந்திப்பு மேம்பாட்டுப் பணிகள் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இப்பணிகள் அனைத்தும் 275 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டமாகச் செயல்படுத்தப்படும். 5. நகர்ப்புர பசுமையாக்கல் மற்றும் பொழுதுபோக்குப் பூங்காக்கள்: சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், நகரங்களில் பசுமைப் பரப்பை அதிகரிக்கவும், பொதுமக்களுக்கான பொழுதுபோக்கு வசதிகளை மேம்படுத்தவும் பல்வேறு பசுமைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். மக்கள் இயக்கமாக ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்படும்.

திருச்சி, திருப்பூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் பெரிய பூங்காக்கள் 130 கோடி ரூபாய் செலவிலும், மாநிலம் முழுவதும் 250 புதிய பூங்காக்கள் 175 கோடி ரூபாய் செலவிலும் என மொத்தம் 305 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

6. பள்ளிகளின் உள்கட்டமைப்பு மேம்பாடு: நகர்ப்புர உள்ளாட்சிகளின் பள்ளிகளில் தரமான கல்வி மற்றும் பாதுகாப்பான சூழலை வழங்கும் வகையில், புதிய வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் நவீன வசதிகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்புப் பணிகள் மொத்தம் 335 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

7. பாரம்பரிய நகரங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களின் சீரமைப்பு: சிதம்பரம் நகராட்சியில் நடைபெறும் உலகப் புகழ்பெற்ற அருள்மிகு தில்லை நடராஜர் திருத்தேர் விழாவைச் சிறப்பாக நடத்தவும், பக்தர்கள் எவ்வித இடையூறுமின்றி தரிசனம் செய்யவும், கோயிலைச் சுற்றியுள்ள நான்கு ரத வீதிகளில் குடிநீர், பாதாளச் சாக்கடை, மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு கம்பிகளைத் தரைக்கு அடியில் கொண்டு சென்று வீதிகளை நவீன முறையில் சீரமைக்க 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கடலூரில் புனித டேவிட் கோட்டை முதல் வெள்ளி கடற்கரை வரை 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாரம்பரிய நடைபாதை அமைக்கப்படும். கன்னியாகுமரி கடற்கரைப் பகுதியை அழகுபடுத்தி, சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்த 50 கோடி ரூபாய் செலவிடப்படும்.

8. சமச்சீர் வளர்ச்சி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாடு: சென்னை மாநகராட்சியின் உட்கட்டமைப்பு வசதி குறைவாக உள்ள பகுதிகளில் சாலைகள், மழைநீர் வடிகால்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், திடக்கழிவு மேலாண்மை வசதிகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் சமுதாய நலக்கூடங்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்த 100 கோடி ரூபாய் செலவிடப்படும். இவ்வாறு முதல்வர் விஜய் அறிவித்தார்.

## தேனி அல்லிநகரம் நகரம்,வட்டாரப் பகுதியில் இயங்கி வரும் ஹோட்டல், பேக்கரி, ஜூஸ், தேநீர் கடைகள் என மொத்தம் 13 வணிக நிறுவனங்களில் உணவு பாதுகாப்புத்துறையின் மூலம் ஆய்வு

தேனியில் பார்சல் வழங்க தரமற்ற பிளாஸ்டிக் பயன்பாடு OTOOT புகார் வரப்பெற்றதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா, வைத்திநாதன்,இ.ஆ.ப, அவர்களின் அறிவுறுத்தலின்படி, தேனி அல்லிநகரம் நகரம் மற்றும் வட்டாரப் பகுதியில் இயங்கி வரும் ஹோட்டல், பேக்கரி, ஜூஸ் மற்றும் தேநீர் கடைகள் என மொத்தம் 13 வணிக நிறுவனங்களில் உணவு பாதுகாப்புத்துறையின் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் போது, தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் தட்டுகள். பிளாஸ்டிக் கப்புகள் மற்றும் பிளாஸ்டிக் சுற்றமைப்புகள் (Wrappers) ஆகியவற்றைப் பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

சூடான உணவுப் பொருட்கள் மற்றும் பானங்களை பிளாஸ்டிக் கவர்களில் பார்சல் செய்வதால் வேதிப்பொருட்கள் உணவில் கலந்து உடலுக்குத் தீங்கு விளைவிக்கும். எனவே. பிளாஸ்டிக்கிற்குப் பதிலாக மக்கக்கூடிய அல்லது உணவுப் பாதுகாக்கப்பட்ட (Food Grade) தரமான மற்றும் பாதுகாப்பான மாற்றுப் பொருட்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். உணவுப் பொட்டலங்களுக்கு வாழை இலை, துணிப் பைகள், காகிதப் பைகள் (Paper Bags), மற்றும் எஃகு (Stainless Steel) அல்லது பாக்கு மட்டைப் பாத்திரங்களைப் பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. கடந்த 0104.2026 முதல் 31.08.2026 வரை தேனி மாவட்டத்தில் தமிழக அரசால் தலை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பயன்பாடு மற்றும் சுகாதாரமற்ற நிலையில் உணவு விற்பனை செய்த உணவு வணிகர்களுக்கு, உணவு பாதுகாப்பு தரங்கள் சட்டம் 2006ன் கீழ் ரூ.178000/ அபராதம் விதிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், தேனி மாவட்டம் ஹோட்டல்கள் சங்கம், வர்த்தக சங்கம் மற்றும் சாலையோர உணவு வணிகர்களுக்கு உணவு பாதுகாப்பு அடிப்படை பயிற்சி மற்றும் உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட நெகிழிப்பை தொடர்பாக கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இனிவரும் காலங்களில் ஆய்வின் போது தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் கண்டறியப்பட்டால் உணவு பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம் 2006 கீழ் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என உணவு வணிகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என உணவு பாதுகாப்புத் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காட்டுநாயக்கன் நகர், பழங்குடி நகர் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் 29ம் ஆண்டு கூழ்வார்த்தல் மற்றும் 5ம் ஆண்டு தீமிதி திருவிழா

செங்குன்றம், செப்03:

மாதவரம்தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சி காட்டு நாயக்கன் நகர், பழங்குடிநகர், டாக்டர்வர பிரசாத் நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் 29ம் ஆண்டு கூழ்வார்த்தல் மற்றும் 5ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் தலைவர் முருகேசன், செயலாளர் குமார், பொருளாளர் மணிகண்டன் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

துணைத்தலைவர்கள் முருகன், பாண்யராஜ், மாணிக்கம், பழனிவேல் ராஜ், சக்திவேல், துணைச் செயலாளர்கள் முருகவேல், ஆறுமுகம், முத்துச்சாமி, விஜயகுமார், மணிகண்டன், வெங்கடேசன் வேங்கையன், சரவணபெருமாள் ஆகியோர் முன்னிலையில் கணபதி பூஜை, பந்தகால்நடுதல், காப்புகட்டுதல், பால்குடம் எடுத்தல், கங்கைதிரட்டுதல், கரகம்எடுத்தல், சீர்வரிசை எடுத்தல், அக்கினி கப்பறைஎடுத்தல், கூழ் வார்த்தல் கும்பம் படையல்பூஜை மற்றும் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப் பட்டது.

கௌரவதலைவர்கள் காமாட்சியப்பன், சுப்பிரமணி, பழனிகுமார், முருகேசன், வீரராகவன், பாண்டியன், பழனிகுமார், இசக்கியப்பன், சின்னமுருகன், நாகராஜ், கோவிந்தராஜ் ஆகியோர் ஒருங்கிணைப்பில் காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்திகடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவிற்கு ஆலய அன்னதான குழு நிர்வாகிகள் வெங்கடேசன், வெங்கையன், சக்திவேல், முருகன், சின்னபாண்டி, பாண்டிதுரை, சரவணபெருமாள், சாந்தகுமார், விஜயகுமார், பழனிவேல் ராஜ், கோவிந்தராஜ், செல்லபாண்டி, மணிகண்டன், பெருமாள், கார்த்திக், வினோத்குமார், அலெக்ஸ்பாண்டி, வேற்றிவேல், திபின், ராஜா, நாகராஜ், செந்தில்குமார், வேலுசாமி, அஜித்குமார், முத்துராஜா, யுவராஜ், தினேஷ்குமார், தீனதயாளன், மகேஷ்வரன், அரசுமோத்துகருப்பன், சரவணன், கண்ணன்உள்ளிட்ட ஆலோசகர்கள், விழாகுழுவினர்கள், தொண்டர் பணி குழுவினர்கள், மகளிர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.

மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது/



# சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் 2026,27

இராணிப்பேட்டை,செப்.3

இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமங்களில் கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நடப்பு 202627 ஆம் ஆண்டிற்கு சிறப்பு சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்திட தமிழ்நாடு அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்பணிகளை முன்னேற்புவிதமாக நடப்பாண்டிற்கு செப்டம்பர் 2026 முதல் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 18 முகாம்கள் வீதம் 7 ஊராட்சி ஒன்றியங்களில் 126 முகாம்கள் நடத்தப்பட உள்ளது. முகாம்களில் பங்குபெறும் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தல், குடற்புழு நீக்கம் செய்தல், நோய்களுக்கு எதிரான தடுப்பூசி போடுதல், ஆண்மை நீக்கம், மலடு நீக்க சிகிச்சைகள், செயற்கைமுறை கருவூட்டல், சினைப்பரிசோதனை, சுண்டுவாத அறுவை சிகிச்சை, நோய் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் பல்வேறு சுகாதார நடவடிக்கைகள் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு இலவசமாக கால்நடை மருத்துவக்குழு மூலம் மேற்கொள்ளப்படும். மேலும் கால்நடை பராமரிப்புத் துறை வழியாக நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்தும், கால்நடை வளர்ப்பில் உண்டாகும் சந்தேகங்களுக்கும் முகாமில் பங்கேற்கும் கால்நடை வல்லுநர்களிடமிருந்து விளக்கம் பெறலாம். இம்முகாம்களில் சிறந்த கால்நடை வளர்ப்பு முறைகளை பின்பற்றும் மூன்று விவசாயிகளுக்கு விருதுகளும், கிடேரி கன்று பேரணி நடத்தி சிறந்த மூன்று கன்று உரிமையாளர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படவுள்ளது. இம்முகாமினை இராணிப்பேட்டை, மாவட்ட ஆட்சித் தலைவர்அவர்கள்முன்னிலையில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.வ. காந்திராஜ் அவர்கள் 05.09.2026 அன்று அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செம்பேடு கிராமத்தில் துவக்கி வைக்க இசைந்துள்ளார்கள். எனவே, இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் தங்களது கால்நடைகளுடன் இம்முகாம்களில் கலந்து கொண்டு பயன்பெற இராணிப் பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.






பழனி கோடைகால நீர்த்தேக்கம் பகுதியில் உள்ள கருவேல மரங்களை அகற்றி மரங்கள் நட பழனி நகராட்சி முடிவு செய்தது.அதன்படி நேற்று பழனி கோடைகால நீர்த்தேக்கத்தில் மரக்கன்றுகள் நடும் பணி தொடங்கியது. ஆணையாளர் ராஜலட்சுமி, சுகாதார அலுவலர் செந்தில் ராம்குமார், உதவி பொறியாளர் பாலமுருகன் தலைமையில் 700 மரக்கன்றுகளை பணியாளர்கள் நடவு செய்தனர்.

# மதநல்லிணக்கத்தை வலியுறுத்தி மாதவரம் பிரம்ம குமாரிகள் நிர்வாகிகள் ரக் ஷா பந்தன் தினம் கொண்டாட்டம்

செங்குன்றம், செப் 03:

பிரம்ம குமாரிகள் மாதவரம் கிளை நிலையம் சகோதரி கீதா அறிவுறுத்தலின் பேரில், ரக் ஷா பந்தன் நாளை முன்னிட்டு மதநல்லிணக்கம், சகோதரப் பாசத்தை வலியுறுத்தும் வகையிலும் சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளரும் சோழவரம் ஊராட்சி ஒன்றிய முன்னாள் துணைப் பெருந்தலைவருமான மீ.வே. கர்ணாகரன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகளை சந்தித்து ரக் ஷா பந்தன் கயிறு கட்டி இனிப்புகள் வழங்கினர்.

அதே போல் 10க்கும் மேற்பட்ட திருநங்கைகளுக்கு ரக் ஷா பந்தன் கயிறு கட்டி சகோதரப் பாசத்தை வெளிக்காட்டும் விதத்தில் இனிப்பு வழங்கினர். இதே போன்று வங்கிகள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் சகோதரர்கள், சகோதரிகளுக்கும் பிரம்ம குமாரிகள் நிர்வாகிகள் ரக் ஷா பந்தன் கயிறு கட்டி இனிப்புகளை வழங்கினர்.








இராணிப்பேட்டை மாவட்ட காவல் அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பே.சிபின், இ.கா.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 45மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்தார்.

# செங்குன்றத்தில் இருசக்கர வாகன திருட்டில் ஈடுபட்டு பாண்டிச்சேரியில் பதுங்கிய இருவர் கைது

## 3 இருசக்கர வாகனங்கள் பறிமுதல்

செங்குன்றம், செப்.3

திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம் சுற்றுப்பகுதிகளில் அண்மை காலமாக இருசக்கர வாகனங்கள் திருடப்பட்டு வந்தன.

இது தொடர்பாக செங்குன்றம் காவல்துறையினர் வழக்குபதிந்து விசாரணை நடத்தினர். சிசிடிவி காட்சிகள் ஆய்வு செய்து குற்றப் பின்னணி கொண்ட நபரின் செல்போன் டவரை ஆய்வு செய்ததில் பாண்டிச்சேரியில் பதுங்கியது தெரிய வந்தது.

இதனையடுத்து செங்குன்றம் குற்றப்பிரிவு போலீசார் பாண்டிச்சேரி சென்று இருவரை கைது செய்து அவர்களிடம் இருந்த 3இருசக்கர வாகனங்களை பறிமுதல் செய்து காவல் நிலையம் அழைத்து வந்து நடத்திய விசாரணையில் செங்குன்றம் சேர்ந்த சஞ்சய் 20, போரூர் சேர்ந்த விக்னேஷ் 25 என்பதும், சஞ்சய் மீது ஏற்கனவே குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதும் தெரியவந்தது.

இதனையடுத்து இருவரையும் பொன்னேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.




# திண்டுக்கல் அருகே வாலிபரை கை, கால்கள் கட்டி வெட்டி படுகொலை செய்த வழக்கில் ஒருவர் கைது

திண்டுக்கல்,செப்.3

திண்டுக்கல், சீலபாடியை அடுத்த குழந்தைபட்டி அருகே தனியார் பள்ளி பின்புறம் அய்யன்குளத்தில் கை, கால்கள் கட்டப்பட்டு மொண்டியபட்டியை சேர்ந்த கரண்ராஜ்(27) என்பவர் வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.

இது குறித்து மாவட்ட S.P.ஜெயக்குமார் உத்தரவின் பேரில் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் உலகநாதன் தலைமையிலான போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு

குழந்தைபட்டி வடக்கு தெருவை சேர்ந்த குமரேசன்(41) என்பவரை கைது செய்து விசாரணை மேற்கொண்ட போது பெரியக்கோட்டையை சேர்ந்த முத்தன்(எ) மருதமுத்து கடந்த பிப்.,ல் வன்னியபட்டி அருகே கொலை செய்யப்பட்டார். அதற்கு கரண்ராஜ் உடந்தையாக இருந்தார். அந்த ஆத்திரத்தில் பழிக்குப்பழியாக கரண்ராஜை கொலை செய்து குளத்தில் வீசியதாக போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.



# அங்கக வேளாண்மைக்கு முக்கியத்துவம்: நல்லாலம் கிராம விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி




செய்யாறு,செப்.3

திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் வட்டாரம், நல்லாலம் கிராமத்தில் 40 விவசாயிகளுக்கு அங்கக வேளாண்மை குறித்த தொழில்நுட்பப் பயிற்சி நடைபெற்றது.

வேளாண்மைத் துறை சார்பில் ஆத்மா திட்டத்தின் கீழ் நடைபெற்ற இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் சித்ரா தலைமை வகித்தார்.

அங்கக வேளாண்மையின் முக்கியத்துவம், ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைத்து இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதன் நன்மைகள், திரவ உயிர் உரங்களின் பயன்பாடு உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

பயிற்சியில் உதவி வேளாண்மை அலுவலர் வெங்கடேசன், ஆத்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் செண்பகம், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஜெனிபர், பன்னீர்செல்வம் மற்றும் மன்னுயிர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் தொழில்நுட்ப வல்லுநர் வெங்கடேஷ் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கினர்.

மேலும், இயற்கை முறையில் பயிர் சாகுபடியை மேற்கொள்வதற்கான எருக்கு கரைசல் மற்றும் ஐந்திலை கரைசல் தயாரிக்கும் முறைகள் குறித்து ஆத்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர்கள் செயல்விளக்கம் அளித்தனர்.

இயற்கை இடுபொருட்களை பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் வளத்தை பாதுகாப்பதுடன், விவசாயச் செலவுகளை குறைத்து தரமான விளைபொரு ட்களை உற்பத்தி செய்ய முடியும் என்றும் பயிற்சியில் விளக்கப்பட்டது.

பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

அங்கக வேளாண்மை தொடர்பாக மேலும் பல்வேறு பயிற்சிகளை தொடர்ந்து வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்ததுடன், பயிற்சியை ஏற்பாடு செய்த வேளாண்மைத் துறை மற்றும் ஆத்மா திட்ட அலுவலர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

முதுகுத் தண்டு காயம் பாதித்தோரின் மறுவாழ்வில் புதிய மைல்கல்:

# திருவண்ணாமலையில் அதிநவீன 'Exoskeleton' நடைப் பயிற்சி தொடக்கம்: கலெக்டர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்




திருவண்ணாமலை, செப். 3

முதுகுத் தண்டு காயம் பாதித்தோரின் மறுவாழ்வில் புதிய மைல்கல் – திருவண்ணாமலையில் அதிநவீன 'Exoskeleton' நடைப் பயிற்சி தொடக்கம்: கலெக்டர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்

உலக முதுகுத் தண்டு காயம் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு, திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட சோல் ஃபிரீ இன்ஸ்பயர் சென்டரில் நடைபெற்ற "மாத்தியோசி 2026" நிகழ்ச்சியின் 5வது பதிப்பில், முதுகுத் தண்டு காயம் பாதித்தவர்களுக்கான அதிநவீன தானியங்கியல் நடைப் பயிற்சி சேவையை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் இன்று (02.09.2026) தொடங்கி வைத்தார்.

முதுகுத் தண்டு காயம் காரணமாக நடக்கும் திறனை இழந்தவர்களின் மறுவாழ்வில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் வகையில், புற எலும்புக்கூடு (Exoskeleton) அடிப்படையிலான Advanced Robotics Gait Training சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி சேவையை சோல் ஃபிரீ நிறுவனம் தனது பயனாளர்களுக்கு முற்றிலும் இலவசமாக வழங்குகிறது.

முதுகுத் தண்டு காயம் பாதித்தவர்களின் உடல் இயக்கத்திறனை மேம்படுத்தவும், அவர்களின் மறுவாழ்வு பயணத்திற்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கவும் இந்த அதிநவீன தொழில்நுட்பம் உதவும் என தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சோல் ஃபிரீ இன்ஸ்பயர் சென்டரில் செயல்படுத்தப்பட்டு வரும் Exoskeleton அடிப்படையிலான Advanced Robotics Gait Training சேவைகள் மற்றும் அதன் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சாரதா, சோல் ஃபிரீ நிறுவன அறங்காவலர் டாக்டர் ப்ரீத்தி சீனிவாசன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அண்ணாமலையார் கோவில் பணியாளர்கள், சிவாச்சாரியார்களுக்கு புத்தாடை வழங்கிய ஆதிசைவ வேளாளர் சங்கம்

## 250 பேருக்கு சீருடை, புத்தாடைகளை இணை ஆணையர் பரணிதரன் வழங்கினார்

திருவண்ணாமலை, செப்.3

திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோவிலில்



பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் சிவாச்சாரியார்கள் 250 பேருக்கு தொண்டை மண்டல ஆதி சைவ வேளாளர் சங்கம் சார்பில் சீருடை மற்றும் புத்தாடைகள் வழங்கப்பட்டன.

அண்ணாமலையார் கோவில் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கோவில் இணை ஆணையர் ஜெ.பரணிதரன் கலந்து கொண்டு, பணியாளர்கள் மற்றும் சிவாச்சாரியார்கள் 250 பேருக்கு சீருடை மற்றும் புத்தாடைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் கோவில் தலைமை சிவாச்சாரியார் பி.டி.ரமேஷ், பி.டி.ஆர். கோகுல், சங்கர், தொண்டை மண்டல ஆதி சைவ வேளாளர் சங்கத் தலைவர் டாக்டர் தில்லை பாஸ்கர், செயலாளர் சண்முகம், பொருளாளர் கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் சங்கத் தலைவர் டாக்டர் தில்லை பாஸ்கர் பேசுகையில், திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் தங்களது சமூகத்தினர் பாரம்பரியமாக உச்சிகால பூஜை உள்ளிட்ட வழிபாட்டு பணிகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்தார். மேலும், ஆண்டுதோறும் நடைபெறும் கார்த்திகை தீபத் திருவிழாவின் போது பஞ்சமூர்த்திகளுக்கான அபிஷேகப் பொருட்களை சீர்வரிசையாக வழங்கி வருவதாகவும் கூறினார்.

கடந்த 2018ஆம் ஆண்டு அண்ணாமலையார் கோவிலுக்கு சுமார் இரண்டரை கிலோ எடையிலான தங்க வில்வ ஆரம் மற்றும் தங்க செண்பக ஆரம் சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் செப்டம்பர் 1ஆம் தேதி அண்ணாமலையார் கோவிலில் சிறப்பு கால சந்தி, உச்சிகால பூஜை, சாயரட்சை அபிஷேகம் மற்றும் சுவாமி–அம்பாள் திருக்கல்யாண வைபவம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த பூஜைகள் மற்றும் அபிஷேகங்களுக்காக கோவில் நிர்வாகத்திடம் ரூ.4 லட்சத்து 50 ஆயிரம் வைப்பு நிதியாக ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் தில்லைபாஸ்கர் தெரிவித்தார். மேலும், ஆண்டுதோறும் செப்டம்பர் 1ஆம் தேதி கோவிலில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும்சிவாச்சாரியார்களுக்கு சங்கத்தின்சார்பில்சீருடை மற்றும் புத்தாடைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

இந்த ஆண்டு முதல் அண்ணாமலையார் கோவிலில் தினமும் நடைபெறும் உச்சிகால பூஜைக்கான பூஜைப் பொருட்களுடன் அண்ணாமலையார் மற்றும் உண்ணாமுலை அம்மனுக்கும் வஸ்திரம் வழங்கும் பணியும் மேற்கொள்ளப்பட உள்ளது என்றும் டாக்டர் தில்லை பாஸ்கர் தெரிவித்தார். தொடர்ந்து, கோவில் பணியாளர்கள் மற்றும் சிவாச்சாரியார்களுக்கு புத்தாடைகள் வழங்கப்பட்ட நிகழ்வு நடைபெற்றது.

# வாலாஜாபேட்டை பஞ்சுபேட்டையில் கொசுப்புழு ஒழிப்பு பணி மற்றும் மருத்துவ முகாம்

வாலாஜாபேட்டை, செப்.3

வாலாஜாபேட்டை நகராட்சிக்குட்பட்ட 4வது வார்டு பஞ்சுபேட்டை பகுதியில், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக கொசுப்புழு ஒழிப்பு பணி,



கால்வாய் தூர்வாரும் பணி மற்றும் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக வீடு வீடாகச் சென்று தண்ணீர் தேங்கியுள்ள இடங்கள், கொசுப்புழு உற்பத்தியாகும் பகுதிகள் கண்டறியப்பட்டு, டெங்கு கொசுப் புழு (லார்வா) ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், அப்பகுதியில் உள்ள கால்வாய்கள் தூர்வாரப்பட்டு தூய்மைப் படுத்தும் பணிகளும் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு மருத்துவப் பரிசோதனை மற்றும் தேவையான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன. பொதுமக்கள் தங்களது வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்வதுடன், கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை உடனடியாக அகற்ற வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், மருத்துவர் ராமமோகன் வீடு வீடாகச் சென்று டெங்கு கொசுப் புழு ஒழிப்பு பணிகளை நேரில் ஆய்வு செய்தார்.

இந்த பணிகளில் நகராட்சி சுகாதார ஆய்வாளர் தட்சிணாமூர்த்தி, சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் நகராட்சியின் பரப்புரையாளர்கள் கலந்து கொண்டு, டெங்கு தடுப்பு மற்றும் சுகாதார விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டனர்.

இதுகுறித்து நகராட்சி சுகாதார ஆய்வாளர் தட்சிணாமூர்த்தி கூறுகையில், "பொதுமக்களின் ஒத்துழைப்புடன் வீடு மற்றும் சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்வதன் மூலம் டெங்குஉள்ளிட்ட கொசுக்களால் பரவும் நோய்களை பெருமளவில் தடுக்க முடியும். நகராட்சி சார்பில் தொடர்ந்து கொசுப்புழு ஒழிப்பு மற்றும் சுகாதார விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்றார்.

# SSA2 நிர்வாகிகள் தேர்வு செய்வதற்கான விருப்ப மனு பெறும் நிகழ்ச்சி

செங்குன்றம், செப் 03:

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் அறிவுறுத்தலின்படியும் தமிழ்நாடு காங்கிரஸ்



கமிட்டியின் வழிகாட்டுதலின்படியும், SSA2 முறைப்படி நிர்வாகிகள் தேர்வு செய்வதற்கான விருப்ப மனு பெறும் நிகழ்ச்சி திருவள்ளூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் வட்டாரம், எல்லாபுரம் வட்டாரம் ஆகிய நிர்வாகிகளுக்கு காவனூரில் உள்ள JGS திருமண மண்டபத்தில் திருவள்ளூர் தெற்கு மாவட்டத் தலைவர் காங்கை குமார் தலைமையில் படிவங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட பொறுப்பாளர் முருகேசன் தேசிய தோழர்களை நேரில் சந்தித்து, விருப்ப மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

மாவட்ட நிர்வாகிகள், வட்டாரத் தலைவர்கள், நகரத்தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள் மற்றும் மண்டல் தலைவர்கள் பதவிகளுக்கு போட்டியிட விருப்பமுள்ள ஏராளமான தேசிய தோழர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, தங்களது விருப்ப மனுக்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள், வட்டாரத் தலைவர்கள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



# 3 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்தவர் கைது - பழனி போலீசார் அதிரடி

திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகா மற்றும் அடிவாரம் காவல் நிலையங்களுக்கு தனிநபர் சொத்தை சேதப்படுத்தியதற்காக மற்றும் பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடைய நபர், கடந்த 3 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்து வந்த நிலையில், இன்று தனிப்படை போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

பாலசமுத்திரம் பகுதியைச் சேர்ந்த வினோத்குமார் (20), தங்கராஜ் என்பவரின் மகன் என்பவரை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் அறிவுறுத்தலின்படி, பழனி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் தேவராஜ் உத்தரவின் பேரில், பழனி தாலுகா காவல் ஆய்வாளர் சத்தியமூர்த்தி தலைமையிலான போலீசார் தனிப்படை அமைத்து தேடி வந்தனர்.

இதையடுத்து தனிப்படை போலீசாரான அருள்சாமி மற்றும் வேலுமணி ஆகியோர் தீவிர விசாரணை மற்றும் தேடுதல் மேற்கொண்டு, நீண்ட காலமாக தலைமறைவாக இருந்த அவரை கண்டுபிடித்து கைது செய்தனர்.

3 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த நபர் கைது செய்யப்பட்ட சம்பவம் பழனி பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





பழநி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் வட்டார வள மையம் சார்பில் வட்டார அளவிலான கலை திருவிழா போட்டிகள் நடைபெற்றது. போட்டிகளை பள்ளி தலைமையாசிரியர் கண்ணகி, வட்டார கல்வி அலுவலர்கள் ஜெயராணி, பழனிராஜூ ஆகியோர் தொடங்கி வைத்தனர். ஓவியம், களிமண் சிற்பம், கதை சொல்லுதல், நடனம் உள்ளிட்ட பல்வேறு வகையான போட்டிகள் நடந்தது. பழநி வட்டாரத்தை சேர்ந்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். போட்டியில் முதலிடம் பிடிக்கும் மாணவர்கள் மாவட்ட அளவில் நடக்கும் கலை திருவிழா போட்டியில் கலந்துகொள்ளதகுதி பெறுவர். ஏற்பாடுகளை வட்டார ஒருங்கிணைப்பாளர் காளிமுத்து செய்தார்.

# செங்குன்றம் தண்டல்கழனியில் 6.5 பவுன் நகை திருடியவர் கைது

செங்குன்றம், செப் 03:

மாதவரம் தொகுதி செங்குன்றம் தண்டல்கழனியைச் சேர்ந்த பூபதி. இவர் எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகின்றார்.

கடந்த ஜூலை மாதம் 23ஆம் தேதி தனது குடும்பத்துடன் வீட்டில் தூங்கி கொண்டிருந்தார். காலையில் எழுந்து பார்த்த போது பீரோவில் இருந்த 6.5சவரன் நகை காணாமல் போனதைத் தொடர்ந்து செங்குன்றம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இந்த புகாரின் பேரில் செங்குன்றம் குற்றப்பிரிவு ஆய்வாளர் பரிபூரணம் வழக்கு பதிந்து கைரேகை நிபுணர்கள் உதவியுடன் தடயங்களை சேகரித்து விசாரித்து வந்தார்.

ஏற்கனவே குற்றப் பின்னணி கொண்ட நபரின் கைரேகையை கொண்டு நடத்திய விசாரணையில் வேறு ஒரு வழக்கில் வில்லிவாக்கம் காவல்துறையால் வில்லிவாக்கத்தை சேர்ந்த



செல்வம் (32), கைது செய்யப்பட்டு, வேலூர் மத்தியசிறையில்அடைக்கப்பட்டுள்ளது தெரிய வந்தது. கடந்த வாரம் ஜாமினில் வெளியே வந்திருந்த நிலையில் கைவரிசை காட்டிய செல்வத்தை செங்குன்றம் காவல்துறையினர் கைது செய்து நடத்திய விசாரணையில் பூபதி வீட்டின் பீரோவில் திருடிய நகைகளை தனது வீட்டில் மறைத்து வைத்திருந்ததை ஒப்புக் கொண்டதை தொடர்ந்து 6 சவரன் நகையை மீட்டு பொன்னேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி செங்குன்றம் காவல்துறையினர் புழல் சிறையில் அடைத்தனர்.

# இராணிப்பேட்டையில் கூட்டு பாலியல் வன்கொடுமை வழக்கில் 3 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை

இராணிப்பேட்டை, செப்.3

கூட்டு பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை

A1க்கு 27 ஆண்டுகள் கடுங்காவல் மற்றும் ரூ.1.40 லட்சம் அபராதம்

A2 மற்றும் A3 ஆகியோருக்கு தலா 20 ஆண்டுகள் கடுங்காவல் மற்றும் ரூ.1.30 லட்சம் அபராதம்

கடந்த 08.09.2025 அன்று இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில்,







ஒரு பெண்ணை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு, இராணிப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் தொடர்புடைய எதிரிகளான A1. பார்த்திபன், A2. சிவராஜ் மற்றும் A3. ராஜா ஆகியோர்கள் அன்றே 08.09.2025 கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார் மேற்படி வழக்கில் எதிரிகள் நீதிமன்றக் காவலில் இருந்து வந்த நிலையில், இவ்வழக்கு இராணிப்பேட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் துரிதமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், இன்று 02.09.2026 இராணிப்பேட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி திருமதி. தேன்மொழி அவர்கள், இவ்வழக்கில் குற்றம் நிரூபிக்க ப்பட்டதன் அடிப்படையில், குற்றவாளிகள் A1. பார்த்திபன் என்பவருக்கு ஆயுள் தண்டனை மற்றும் 27 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை, மேலும் ரூ.1,40,000/ அபராதமும், எதிரிகள் A2. சிவராஜ் மற்றும் A3. ராஜா ஆகியோருக்கு ஆயுள் தண்டனை மற்றும் தலா 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை, மேலும் தலா ரூ.1,30,000/ அபராதமும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இவ்வழக்கில் நீதிமன்றத்தில் சிறப்பாக வழக்கை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்த முன்னாள் அரசு வழக்கறிஞர் திரு.சங்கர், தற்போதைய அரசு வழக்கறிஞர் திரு.டில்லி, வழக்கின் புலனாய்வு அதிகாரியான காவல் ஆய்வாளர் திருமதி ஷாகின் மற்றும் நீதிமன்ற காவலர் WPC308 திருமதி. ஐஸ்வர்யா ஆகியோரை, இராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பே. சிபின், இ.கா.ப., அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.

இவ்வழக்கில் துரிதமாகவும் சிறப்பாகவும் புலன் விசாரணை மேற்கொண்டு, நீதிமன்றத்தில் வழக்கை திறம்பட நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்த அரசு வழக்கறிஞர், புலனாய்வு அதிகாரி மற்றும் நீதிமன்ற காவலர் ஆகியோருக்கு இராணிப்பேட்டை மாவட்ட காவல்துறை சார்பில் பாராட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன.

# புதுப்பாளையத்தில் 59 தன்னார்வலர்களுக்கு புதிய பாரத எழுத்தறிவு திட்ட பயிற்சி

செங்கம்,செப்.3

திருவண்ணாமலை மாவட்டம் புதுப்பாளையம் வட்டார வள மையத்தில் பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் புதிய பாரத எழுத்தறிவு திட்டத்தின் கீழ், தன்னார்வலர்களுக்கான பாடப்பொருள் சார்ந்த பயிற்சி நடைபெற்



றது. இதனை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ் பார்வையிட்டு, தன்னார்வலர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். குறிப்பாக, கல்லாதவர்களுக்கு வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை எண்களை கற்றுக் கொடுப்பதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். பயிற்சியை வட்டாரக் கல்வி அலுவலர்கள் மதி. ஷகிலா மற்றும் ஆறுமுகம் ஆகியோர் தொடங்கி வைத்தனர். பயிற்சியில், 'படமும் பாடமும்', 'முயற்சியும் மூலதனமும்', 'வாழ்வியலும் ஆளுமையும்', 'இயற்கையோடு இணைவோம்', 'அவ்வையும் நெல்லிக்கனியும்', 'நூலகப் பூக்கள்', 'வடிவங்கள்', 'கூடித் தொழில் செய்வீர்', 'சட்டமும் திட்டமும் அறிவோம்', 'நம் தொழில்', 'உடல்நலம் காப்போம்', 'இணையவழி சேவை மற்றும் பணமில்லா பரிமாற்றம்', 'பேரிடர் மேலாண்மை', 'சாலை பாதுகாப்பு', 'சாதனைப் பெண்கள்', 'தூய்மை பாரதம்' உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், கல்வி தொடர்பான பாடல்கள் மற்றும் அன்றாட வாழ்வில் பயன்படும் அடிப்படை அறிவு சார்ந்த கருத்துகளும் பயிற்சியில் இடம்பெற்றன. பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார வள மைய மேற்பார்வையாளர் சின்னராஜி செய்திருந்தார். இதில் 59 தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

பயிற்சியாளர்களாக இடைநிலை ஆசிரியர் ஏழுமலை, வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் சம்பத், ஹரிகிருஷ்ணன், தண்டாயுதபாணி ஆகியோர் செயல்பட்டனர். பயிற்சி நிறைவில் ஆசிரியர் பயிற்றுநர் ஜம்பு குமார் நன்றி கூறினார். இதன் தொடர்ச்சியாக, புதுப்பாளையம் வட்டாரத்தில் கல்லாதவர்களை குடியிருப்புகள் வாரியாக கண்டறிந்து, அவர்களுக்கு தொடர்ந்து எழுத்தறிவு மற்றும் அடிப்படை கல்விப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# பாப்பம்பட்டியில் சட்டவிரோத மதுபான விற்பனை - ஒருவர் கைது




பழனி தாலுகா காவல் நிலையத்திற்குட்பட்ட பாப்பம்பட்டி பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை நடைபெறுகிறதா என காவல் ஆய்வாளர் சத்தியமூர்த்தி தலைமையில் உதவி ஆய்வாளர்கள் ராஜ்குமார், ஆனந்த் மற்றும் காவல்துறையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது பாப்பம்பட்டி வடக்கு தெருவை சேர்ந்த 25 வயதான தேவா என்பவரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தினர் விசாரணையில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்தது தெரிய வந்துள்ளது..

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிவபெருமான் காட்சி கொடுத்த தூத்துக்குடி ஆத்தூர் அருகிலுள்ள சேர்ந்த

# பூ மங்களத்தில் அமைந்துள்ள 9.தாவது நவகைலாயத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ கைலாசநாதர் ஸ்ரீ அழகிய பொன்னம்மை, ஆகியோருக்கு அதிகாலை 5.1/2 செய்ய வேண்டிய அபிஷேக வழிபாடுகளை காலை 10 மணிக்கு செய்யும் பூசாரியை உடனே மாற்றம் வேண்டும்



## ஆழ்வார் திருநகரி எம்ஜிஆர்இளைஞரணி அதிமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வகுமார் கோரிக்கை

**தூத்துக்குடி செப் 3.**

தூத்துக்குடி தெற்கு மாவட்டஆழ்வார் திருநகரி கிழக்கு ஒன்றிய அதிமுக எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் செல்வகுமார் கூறுகையில் இந்து அறநிலையத்துறை கோவில்நிர்வாக செயல் அலுவலர் மகேஸ்வரி செயல் பாட்டில் உள்ள

தூத்துக்குடி ஆத்தூர் சேந்தபூமங்கலத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அருள்மிகு சிவபெருமான் காட்சி கொடுத்ததாக கூறப்படும் 9.தாவது நவகைலாயத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ, கைலாசநாதர் ஸ்ரீ, அழகிய பொன்னம்மை ஆகியோருக்கு அதிகாலை 5:30 மணிக்கு செய்ய வேண்டிய அபிஷேக அலங்காரத்தை காலை 10 மணிக்கு வந்து செய்யும் பூசாரியை உடனே மாற்றம் செய்ய வேண்டும்,

அதேபோல் கோவில் முன்பு 1.1/2. ஏக்கரில் முன்பு அமைந்திருந்து தற்ப்போது காணாமல் போனதாககூறப்படும் தெப்பக்குளத்தை மீண்டும் கண்டுபிடித்துகோவில் வழிபாட்டிற்கு வரும் பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும்,

அதேபோல் கடந்த எட்டு மாதகாலமாக 27 லட்சம் மதிப்பீட்டில் இந்து அறநிலைத்துறையின் மூலம் கட்டப்பட்டு கடந்த 8 மாதமாக திறக்கப்படாமல் காட்சி பொருளாக உள்ள குளியலறை மற்றும் கழிப்பறையை முழுமையாக கட்டி முடித்து கோவிலுக்கு வரும்பக்தர்கள் பயன்பாட்டிற்கு உடனே திறக்க வேண்டும்,

அதேபோல் இந்து மதத்தைச் சேர்ந்த சிவ பக்தர்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் சேர்ந்த பூ மங்களம் அருள்மிகு கைலாசநாதர் கோவிலில் சிவபெருமான் காட்சி கொடுத்த வரலாற்றை குறிப்பிட்டு பேருந்து நிலையம் முன்பு இந்து அறநிலையத்துறை சார்பில் நவகைலாயத்தின் சிறப்புகளை போர்டு வைக்க வேண்டும், என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை உடனே இந்து அறநிலைத்துறை செய்ய வேண்டும் என்று ஆழ்வார் திருநகரி அதிமுக கிழக்கு ஒன்றிய எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் செல்வகுமார் மேற்கண்டவாறு இந்து அறநிலைத்துறைக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., வாலாஜா வட்டம், அம்மூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 12,13, எல்எப்சி மேல்நிலைப்பள்ளி எதிரில் உள்ள மாநில நெடுஞ்சாலையின் நடுத்தடுப்பினில் (Centre Median) நகர்புற பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் திரிவேனி நிறுவனம் சார்பில் மலர்செடிகளைநட்டார்கள்.உடன்பேரூராட்சி தலைவர் சங்கீதா மகேஷ், பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள் சரிதா ஜெயவேல், சண்முகம், பேரூராட்சி செயல் அலுவலர் அர்ஜுன் மற்றும் பலர் உள்ளனர்.

# திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.5.63 கோடியில் 452 வேளாண் இயந்திரங்கள்

## மானியத்தில் பெற விண்ணப்பிக்கலாம்: கலெக்டர் வந்தனா கார்க்

திருவண்ணாமலை, செப். 3

திருவண்ணாமலை மாவட்டத்தில் விவசாயிகளின் வேளாண் பணிகளை எளிதாக்கும் வகையில், வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் நடப்பு ஆண்டில் ரூ.5 கோடியே 63.35 லட்சம் மதிப்பில் 452 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மானியத்தில் வழங்க அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இந்த மானியத்தில் சிறு, குறு விவசாயிகள், மகளிர் விவசாயிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 50 சதவீத மானியமும், பெரு விவசாயிகளுக்கு 40 சதவீத மானியமும் வழங்கப்படும்.

மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவீத மானியம் வழங்கப்படும். பொதுப்பிரிவைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகள் நெல் நடவு இயந்திரம், களையெடுக்கும் இயந்திரம் மற்றும் தீவனம் நறுக்கும் கருவி ஆகியவற்றை வாங்குவதற்கு கூடுதலாக 10 சதவீத மானியம் வழங்கப்படும்.

செப்டம்பர் 2026 முதல் விவசாயிகள் ஒவ்வொரு மாதமும் 1ம் தேதி முதல் 7ம் தேதி வரையிலும் அல்லது 15ம் தேதி முதல் 21ம் தேதி வரையிலும் 'உழவர் செயலி' மூலம் விண்ணப்பிக்கலாம்.

உழவர் செயலியில் 'வேளாண்மை இயந்திரங்கள் வாடகைக்கு' என்ற தொகுதிக்குச் சென்று, 'வேளாண்மைப் பொறியியல் மானியத் திட்டங்கள்' என்ற பிரிவைத் தேர்வு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் விவசாயியின் புகைப்படம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தால் சாதிச் சான்றிதழ், சிறு அல்லது குறு விவசாயி சான்றிதழ், அடங்கல், டிராக்டரால் இயக்கக்கூடிய கருவிகளுக்கு டிராக்டர் வாகனப் பதிவுச் சான்றிதழ் மற்றும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் உள்ளிட்ட தேவையான ஆவணங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதமும் 1ம் தேதி முதல் 7ம் தேதி வரை விண்ணப்பிக்கும் விவசாயிகளுக்கு, அடுத்த 8ம் தேதி அன்று வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கான இலக்கின் அடிப்படையில் கணினிமயமாக்கப்பட்ட குலுக்கல் முறையில் இணையதளம் வாயிலாக ஒதுக்கீடு செய்யப்படும். தேர்வு செய்யப்படும் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த மானியத் தொகையின் அடிப்படையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு திருவண்ணாமலை, கீழ் பென்னாத்தூர், தண்டராம்பட்டு, செங்கம், கலசப்பாக்கம்மற்றும்போளூர்வட்டங்களைச்சேர்ந்தவிவசாயிகள், 134/இ5, அரசினர் பூங்கா எதிரில், குறிஞ்சி நகர், வேங்கிக்கால், திருவண்ணாமலை என்ற முகவரியில் உள்ள உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

அதேபோல் ஆரணி, செய்யாறு, வெம்பாக்கம், வந்தவாசி மற்றும் சேத்துப்பட்டு வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், எண்.3, மில்லர்ஸ் சாலை, வேளாண் வணிக விற்பனை மைய வளாகம், ஆரணி என்ற முகவரியில் உள்ளஉதவிசெயற்பொறியாளர், வேளாண்மைப்பொறியியல் துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு கூடுதல் விவரங்களைப் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

# திருவண்ணாமலை எஸ்கேபி கல்லூரியில் 'AWS Student Community Day' - நவீன தொழில்நுட்ப வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு நிபுணர்கள் விளக்கம்

திருவண்ணாமலை, செப். 3

திருவண்ணாமலை எஸ்கேபி பொறியியல் கல்லூரியின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை, '*AWS Student Builder Group*' உடன் இணைந்து நடத்திய '*AWS Student Community Day*' என்ற சிறப்பு தொழில்நுட்பக் கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு எஸ்கேபி கல்விக் குழும நிறுவனங்களின் தலைவர் கு. கருணாநிதி தலைமை தாங்கினார். இணைச் செயலாளர் கே.வி. அரங்கசாமி, முதன்மை நிர்வாக அதிகாரி முனைவர் ஆர். சக்தி கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். பாஸ்கரன், கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறைத் தலைவர் முனைவர் என். புருஷோத்தமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரி மக்கள் தொடர்பு அலுவலர் சையத் ஜஹிருத்தீனும் கலந்து கொண்டார்.

கருத்தரங்கில் லண்டன் அக்சென்ச்சர் நிறுவனத்தின் என்டர்பிரைஸ் டெக்னிக்கல் ஆர்க்கிடெக்ட் மேலாளர் ஹர்ஷா ஆர். பொத்தாபு,AWSநிறுவனத்தின் என்டர்பிரைஸ் சொல்யூஷன்ஸ் ஆர்க்கிடெக்ட் சேத்தன் மக்வானா, HCL நிறுவனத்தின் மூத்த ஆலோசகரும் AWS கம்யூனிட்டி பில்டருமான எம். மகேஸ்வரகுமார் முத்துசாமி, எம்காக் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தின் தொழில்நுட்ப இயக்குநர் எஸ்.வி. ப ரீராஜ், EY நிறுவனத்தின் அட்வான்ஸ்டு அனலிஸ்ட் அச்சானந்தி, *Savemom* நிறுவனத்தின் ஃபுல்ஸ்டாக் சாஃப்ட்வேர் இன்ஜினியரும் AWS கம்யூனிட்டி பில்டருமான திலீப் எஸ்.இ. ஆகியோர் சிறப்பு



விருந்தினர்க ளாக பங்கேற்று சிறப்புரையாற்றினர். அவர்கள் தங்களது உரைகளில் கிளவுட் கம்ப்யூட்டிங், *Amazon Web Services* (AWS), டேட்டா அனலிடிக்ஸ் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்கள் குறித்தும், மென்பொருள் துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகள் குறித்தும் மாணவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தனர். தொழில்நுட்பத் துறையின் தேவைகளுக்கு ஏற்ப மாணவர்கள் தங்களது திறன்களை தொடர்ந்து மேம்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற பேனல் கலந்துரையாடலில் மாணவர்கள்எழுப்பியபல்வேறு கேள்விகளுக்கு தொழில்துறை வல்லுநர்கள் விளக்கமளித்தனர்.

இதன் மூலம் மாணவர்கள் நவீன தொழில்நுட்பங்கள் தொடர்பான தங்களது சந்தேகங்களுக்கு நேரடியாகத் தெளிவு பெற்றனர்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக மாணவர்களுக்கான வினாடிவினா போட்டியும் நடத்தப்பட்டது. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இதன் மூலம் மாணவர்கள் AWS மற்றும் கிளவுட் தொழில்நுட்பங்கள் குறித்த தங்களது அறிவை மேம்படுத்திக்கொள்வதுடன், தொழில்நுட்பத் துறையில் நிலவும் சமகால வளர்ச்சிப் போக்குகள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் குறித்தும் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். நிகழ்ச்சியை பேராசிரியர் எஸ். கல்பனா, மாணவர் தலைவர் எஸ்.பி. ஜெய் ஆகாஷ், நிகழ்வு ஒருங்கிணைப்பாளர் எல். சுந்தர் ராஜி, தொழில்நுட்பக் குழுத் தலைவர் என். ஹரீஷ், சமூக ஊடகத் தலைவர் டி. விஷால் குமார், ஐ.டி. ஆதரவுத் தலைவர் ஜி. மனோஜ் குமார், ஆஃப்சைட் ஆதரவுத் தலைவர் ஐ. ஜெசிதா ஜெனிபர் ஆகியோர் அடங்கிய குழுவினர் ஒருங்கிணைத்தனர். நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் திரளாக கலந்து கொண்டு, AWS, கிளவுட் கம்ப்யூட்டிங் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் தொடர்பான பல்வேறு புதிய தகவல்களை அறிந்து பயனடைந்தனர்.

# வாலாஜாபேட்டை நகர்ப்புற சுகாதார மையத்தில் நகராட்சி ஆணையாளர் ஆய்வு

வாலாஜாபேட்டை,செப்.3

வாலாஜாபேட்டை நகராட்சிக்குட்பட்ட நகர்ப்புற சுகாதார மையத்தை, வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையாளர் மேகலா நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது சுகாதார மையத்தில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவ சேவைகள், நோயாளிகளுக்கான அடிப்படை வசதிகள், மருத்துவ உபகரணங்களின் பயன்பாடு, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகளின் செயல்பாடுகள் குறித்து அவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், சுகாதார மையத்தின் சிறப்பம்சங்கள் மற்றும் பொதுமக்களுக்கு பயனளிக்கும் மருத்துவ சேவைகள் குறித்து கேட்டறிந்த ஆணையாளர், அங்கு காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு செய்தனர்



பொதுமக்களுக்கு தரமான மருத்துவ சேவைகள்தொடர்ந்துகிடைப்பதைஉறுதிசெய்யவும், சுகாதார மையத்தில் தேவையான வசதிகளை மேம்படுத்தவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார். ஆய்வின்போது சுகாதார மைய மருத்துவர்கள் ராம் மோகன், செவிலியர்கள் நகராட்சி சுகாதார ஆய்வாளர் தக்ஷிணாமூர்த்தி மற்றும் நகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.



**திண்டுக்கல் தாடிக்கொம்பு, அகரம் அருள்மிகு முத்தாலம்மன் திருக்கோவிலில் திருவிழா நடத்த அம்மனிடம் உத்தரவு கிடைக்கவில்லை ஆகவே இந்த ஆண்டு கோயில் திருவிழா நடைபெறாது என்று கோயில் நிர்வாகம் சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது**

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA